**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 27/2023**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08 ஆம் நாள் வியாழன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகையன் | த/பெ.: | குப்பு |
| கிராமம்: | கள்ளிக்குடி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கட்டணம் வசூலிப்பவர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் |
| வயது: | 49 | முகவரி: | 49 இ 2/50 இ பள்ளிகூடத்தெரு, நெடும்பலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 08.02.2024

**ம.சா.1ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 30.03.2018 | முதல் தகவல் அறிக்கை - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.2 | 30.03.2018 | TN-V-9198 என்ற எண் கொண்ட SRT பேருந்தின்-ன் MV Report - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.3 | 30.03.2018 | TN-Y-7470 என்ற எண் கொண்ட ARS மினி பேருந்தின்-ன் MV Report - ஜெராக்ஸ் காப்பி |
| ம.சா.ஆ.4 | 30.03.2018 | A.R.Copy – உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 04.04.2018 | Discharge Summary – உண்மை நகல் |

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

விபத்து சமயத்தில் எனது வயது என்பதற்காக ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஏஆர்எஸ் மினிபஸ்சில் பயணம் செய்தேன். எஸ்ஆர்டி பஸ்தான் ஏஆர்எஸ் பஸ்மீது மோதி விபத்து நடந்தது. ஏஆர்எஸ் மினி பஸ்தான் பழைய அகலம் குறைவான ரோட்டில் வந்து முறையாக பஸ் பயணம் செய்யவேண்டிய எஸ்ஆர்டி பஸ் மீது மோதியது. அதனால் தான் ஏஆர்எஸ் பஸ் கவிழ்ந்தது என்றால் சரியல்ல. எஸ்ஆர்டி பஸ்சில் பயணம் செய்த நபர் யாருக்கும் காயம்

இல்லை, ஏஆர்எஸ் பஸ் ஓட்டுநர் அஜாக்கிரதையாக ஓட்டிவந்து வரவேண்டிய சாலையில் வராமல் குறுக்கு பாதையில் வந்ததால் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. அதனால் இந்த விபத்திற்கு காரணம் ஏஆர்எஸ் பஸ் டிரைவர் தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் எந்தவித காரணமும் இல்லை. இந்த விபத்தில் 1ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்கவேண்டியது இல்லை என்றும், அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

**<u>2 மற்றும் 4 ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் விபத்து சமயத்தில் வயது , வருமானம் காண்பிக்கக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த மினிபஸ்ஸில் பயணம் செய்தேன் என்று காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் ஆகும். அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு குணமடைந்துவிட்டால் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கான செலவினங்கள் குறித்து ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பயணம் செய்த பேரூந்து அதிக பயணிகளை ஏற்றிச்சென்றதால் விபத்து ஏற்பட்டது. அதனால் 2,4 எதிர்மனுதாரர்கள் காப்பீடு பாலிசி நிறுவனத்தில் இருந்து எவ்வித இழப்பீடும் தர கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள் இழப்பீடு தொகை அதிகம் என்றும், அதனால் எவ்வித இழப்பீடு தர 2,4 எதிர்மனுதாரர்கள் தர கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு சிகிச்சை அரசு மருத்துமனையில் வைத்து நடந்தது. எனக்கு காயம் ஏற்பட்டது சொற்ப காயம் என்றும், நான் நல்ல நிலையில் இருப்பதால் காயத்தினால் எனக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துமனையில் இரண்டு நாட்கள் மட்டுமே சிகிச்சை பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இழப்பீடு பெற தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd:/முருகையன்

Sd:/திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம்,
சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு)
திருத்துறைப்பூண்டி.